பதிவுத்துறை

அனுப்புநர்:

பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 600 028.

பெறுநர்:

1. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
2. அனைத்து சார்பதிவாளர்கள்,
(இணைப்புடன்)

கடிதஎண்.3990/G2/2022 நாள்:20.06.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: திருமணப்பதிவு - இணையவழியாக விண்ணப்பித்து திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தம் பெறுதல் - பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் - தொடர்பாக

பார்வை: அரசாணை G.O.(Ms.) No.78 Commercial Taxes and Registration(J2) Department, dated 24.05.2022

****

2022-2023-ம் ஆண்டின் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் "பதிவு செய்யப்பட்ட திருமணங்களுக்கான சான்றுகளில் திருத்தம் தேவைப்படின் பதிவுத்துறை அலுவலகங்களுக்கு நேரில் வராமல் இணையவழியாகவே விண்ணப்பித்து திருந்திய சான்றினைப் பெறும் வசதி ரூ.6.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தம் வழங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி பார்வையில் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2) இந்து திருமணப்பதிவுச்சட்டம் 1955, தமிழ்நாடு திருமணங்கள் பதிவு சட்டம் 2009 மற்றும் தனித்திருமண பதிவுச்சட்டம் 1954 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் திருமணங்களை பொருத்து, பொதுமக்களாகிய திருமணத்தரப்பினரே இணையவழியில் விண்ணப்பித்து திருத்தம் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்து Star 2.0 மென்பொருளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

3) தமிழ்நாடு திருமணங்கள் பதிவு சட்டம் 2009 மற்றும் தனித்திருமண பதிவுச்சட்டம் 1954 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களை பொறுத்தவரை பொதுமக்களின் திருத்தம் கோரும் இணையவழி விண்ணப்பமானது, கோரும் திருத்தத்திற்கு ஆதாரமாக விண்ணப்பதாரரால் சுய அத்தாட்சி செய்யப்பட்டு ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணத்துடன்,

Verified RealEstate ™

திருமணம் பதிவு செய்யப்பட்ட சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளர் உள்நுழைவுக்கு அனுப்பப்படும்.

i) திருமணப்பதிவின்போது தாக்கல் செய்யப்பட்ட திருமணப்பதிவு விண்ணப்பம் மற்றும் பதிவின்போது அளிக்கப்பட்ட சான்றாவணங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் / உதவியாளர் குறிப்புரையுடன் சார்பதிவாளர் உள்நுழைவிற்கு அனுப்பப்பட வேண்டும்.
ii) இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்ட ஆவணங்கள் சார்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு, திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்பட / விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்பட அல்லது நிராகரிக்கப்பட மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
iii) சார்பதிவாளரால் குறிப்புரையுடன் திருத்தம் கோரும் விண்ணப்பம் விண்ணப்பதாரருக்கு திரும்ப அனுப்பப்படும் நிகழ்வில் விண்ணப்பதாரர் குறைகளை நிவர்த்தி செய்து விண்ணப்பத்தினை மீள சமர்ப்பிக்கலாம்.
iv) சார்பதிவாளரால் திருத்தம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படின் திருத்த குறிப்பு திருமணப்பதிவு சான்றிதழில் சேர்க்க இயலாது.
v) சார்பதிவாளரால் திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்படின் திருத்தம் குறித்து விவரம் அடிக்குறிப்பாக திருமணப்பதிவு சான்றிதழில் சேர்க்கப்படும்.

4) இந்து திருமணப்பதிவுச்சட்டம் 1955-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களைப் பொறுத்தவரை பொதுமக்களின் திருத்தம் கோரும் இணையவழி விண்ணப்பமானது, கோரும் திருத்தத்திற்கு ஆதாரமாக விண்ணப்பதாரரால் சுய அத்தாட்சி செய்யப்பட்டு ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணத்துடன், திருமணம் பதிவு செய்யப்பட்ட சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளர் உள்நுழைவுக்கு அனுப்பப்படும்.

i) திருமணப்பதிவின்போது தாக்கல் செய்யப்பட்ட திருமணப்பதிவு விண்ணப்பம் மற்றும் பதிவின்போது அளிக்கப்பட்ட சான்றாவணங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் / உதவியாளர் குறிப்புரையுடன் சார்பதிவாளர் உள்நுழைவிற்கு அனுப்பப்பட வேண்டும்.
ii) இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சான்றாவணங்கள் சார்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்பட / விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்பட அல்லது நிராகரிக்கப்பட மென்பொருளில் வழிவகை உள்ளது.

Verified RedEstate

iii) சார்பதிவாளரால் குறிப்புரையுடன் திருத்தம் கோரும் விண்ணப்பத்தினை விண்ணப்பதாரருக்கு திரும்ப அனுப்பப்படும் நிகழ்வில் விண்ணப்பதாரர் குறைகளை நிவர்த்தி செய்து விண்ணப்பத்தினை மீள சமர்ப்பிக்கலாம்.

iv) சார்பதிவாளரால் திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்படின், விண்ணப்பம் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக 'G' பிரிவு இளநிலை உதவியாளர் / உதவியாளர் உள்நுழைவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

v) சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டு, 'G' பிரிவு இளநிலை உதவியாளர் / உதவியாளர் குறிப்புரையுடன் விண்ணப்பம் 'G' பிரிவு கண்காணிப்பாளரின் உள்நுழைவிற்கு அனுப்பப்படும்.

vi) சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணங்கள் பார்வையிடப்பட்டு, 'G' பிரிவு கண்காணிப்பாளரின் குறிப்புரையுடன் திருத்தம் கோரும் விண்ணப்பம் பதிவுத்துறைத்தலைவர் அலுவலக மாவட்டப்பதிவாளர் (வழிகாட்டி) உள்நுழைவிற்கு அனுப்பப்படும்.

vii) சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணங்கள் பார்வையிடப்பட்டு, மாவட்டப்பதிவாளர்(வழிகாட்டி)-ஆல் திருத்தம் கோரும் விண்ணப்பமானது, கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் (புலனாய்வு) உள்நுழைவிற்கு அனுப்பப்படும்.

viii) சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணங்களை கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு) பார்வையிட்டு திருத்தம் கோரும் விண்ணப்பத்தினை குறிப்புரையுடன் பதிவுத்துறைத்தலைவருக்கு அனுப்புவதற்கும் / சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளருக்கு திருப்பி அனுப்பவோ அல்லது விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பவோ வழிவகை உள்ளது.

ix) கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு)-ஆல் சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளருக்கு திருத்தம் கோரும் விண்ணப்பமானது திருப்பி அனுப்பப்படும்போது குறைகளை நிவர்த்தி செய்து விண்ணப்பத்தினை மீள அனுப்பலாம்.

x) திருத்தம் கோரும் விண்ணப்பமானது கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு)-ஆல் விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்படும்போது குறைகளை நிவர்த்தி செய்து விண்ணப்பத்தினை விண்ணப்பதாரர் மீள சமர்ப்பிக்கலாம்.

Verified RealEstate™

xi) திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்படின் கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு) குறிப்புரையுடன் பதிவுத்துறைத்தலைவர் உள்நுழைவிற்கு அனுப்பப்படும்.

xii) சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் / உதவியாளரால் ஒளிவருடல் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றாவணங்களை பதிவுத்துறைத்தலைவர் பார்வையிட்டு திருத்தம் கோரும் விண்ணப்பத்தினை ஏற்கவோ / குறிப்புரையுடன் நிராகரிக்கவோ மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

xiii) பதிவுத்துறைத்தலைவரால் திருத்தம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படின் திருத்த குறிப்பு திருமணப்பதிவு சான்றிதழில் சேர்க்க இயலாது.

xiv) பதிவுத்துறைத்தலைவரால் திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்படின் திருத்தம் குறித்து விவரம் அடிக்குறிப்பாக திருமணப்பதிவு சான்றிதழில் சேர்க்கப்படும்.

5) பொதுமக்கள் எளிதாக இணையவழியில் திருமணப்பதிவு சான்றிதழில் திருத்தம் பெறுவதற்கான அரசாணையினை செயல்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

i) பதிவு பொதுமக்கள் திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு இணையவழியில் விண்ணப்பிப்பதற்கான நடைமுறைகள் குறித்த பயனர் கையேட்டினை (User Manual - Portal) சார்பதிவாளர் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

ii) திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தம் தொடர்பாக இணையவழியில் விண்ணப்பிப்பது குறித்து பதிவு பொதுமக்கள் கேட்கும் சந்தேகங்களுக்கான விளக்கங்கள் சார்பதிவாளர் மற்றும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களால் வழங்கப்பட வேண்டும்.

iii) இளநிலை உதவியாளர் / உதவியாளர் மற்றும் சார்பதிவாளர்கள் தங்கள் உள்நுழைவில் உள்ள திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தம் கோரும் விண்ணப்பங்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு சான்றாவணங்களை பரிசீலனை செய்ய வேண்டும். கோரும் திருத்தம் ஏற்கப்படாத நிலையில் இருப்பின் உடனடியாக சார்பதிவாளரால் விண்ணப்பதாரரின் உள்நுழைவிற்கு திருப்பப்பட வேண்டும்.

iv) தமிழ்நாடு திருமணங்கள் பதிவு சட்டம் 2009 மற்றும் தனித்திருமண பதிவுச்சட்டம் 1954 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களை பொறுத்தவரை கோரும் திருத்தம் ஏற்கக்கூடியது என சார்பதிவாளர்கள் மன நிறைவு அடையும் நேர்வில் திருமணப்பதிவேட்டில் உரிய பதிவின் கீழ்

Verified RedEstate

திருத்தம் குறித்து விவரத்தினை அடிக்குறிப்பாக மேற்கொள்வதற்கு சார்பதிவாளர்கள் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

v) இந்து திருமணப்பதிவுச்சட்டம் 1955-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களைப் பொறுத்தவரை திருத்தம் கோரும் விண்ணப்பம் ஏற்கக்கூடியது என சார்பதிவாளர்கள் மன நிறைவு அடையும் நேர்வில் உடனடியாக பதிவுத்துறைத்தலைவர் அலுவலக 'ஜி' பிரிவு இளநிலை உதவியாளர் / உதவியாளரின் உள்நுழைவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

மேற்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளை தவறாது பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டமைக்கு அனைத்து சார்பதிவாளர்களிடமிருந்து ஒப்புதலை பெற்று அதன் விவரத்தினை மாவட்டப்பதிவாளர்கள் துணைப்பதிவுத்துறைத்தலைவர்களுக்கு அளித்திடவும், மாவட்டப்பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்களை துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் ஒருங்கிணைந்த அறிக்கையாக பதிவுத்துறைத்தலைவருக்கு அளித்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-20.06.2022
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணையின்படி/

20/6/22

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் (புலனாய்வு)

நகல்:

1. அனைத்து மண்டல துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
2. சரக உதவி பதிவுத்துறைத்தலைவர்கள்,
3. M/s.T.C.S. நிறுவனம் – மின்னஞ்சல் வழியாக
4. முக்கிய ஆணை கோப்பு

Verified RealEstate